726

قواعد المهم في مهمات الدين

726
3.55

பிஸ்மில்லாஹி
யாஹுர்

# தீனின் முக்கிய சட்டதிட்டங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1955
MADRAS

தஞ்சாவூர் ஜில்லா பண்டாரவாடை
மவுலவி கா. மு. முஹம்மது தாஹிர் (நூரி)
அவர்கள் இயற்றியது.

ஹிஜ்ரி 1374 துல்ஹஜ் பிறை 25
1955
[...ண்டாம் பதிப்பு] [விலை வே. 1

297.4
N55
113068

யாஹூர்

# தீனின்
# முக்கிய சட்டதிட்டங்கள்.


ஆசிரியர்
மவுலவி. கா. மு. முஹம்மது தாஹிர் (நூரி)
பண்டாரவாடை, தஞ்சாவூர் ஜில்லா.



பதிப்பிக்கப்பட்டது.
அயினுராஜ் பிரஸ், அய்யம்பேட்டை.
(தஞ்சாவூர் ஜில்லா)

ஹிஜ்ரி 1374 துல்ஹஜ் பிறை 25.

இரண்டாம் பதிப்பு] 1955. [விலை. வெ. 1.

# முகவுரை.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்றஹீம்.

அல்ஹம்துலில்லாஹிரப்பில்ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமுஅலாசையதில்முர்ஸலீன்வஅலாஆலிஹி வஅஸ் ஹாபிஹிஅஜ்மஈன் எல்லா புகழும் சர்வ வல்லமையுள்ள பராபரக் கடவுளாகிய பாக்பர் வர்திகாரென்னும் சுத்தசைதன்யம் வாய்ந்த அல்லாஹ் ஜல்லஜலாலஹு வத்தஆலாவுக்கே உரியது. இன்னும் சலாத்தென்னும் கருணையும் சலாமென்னும் ஈடேற்றமும் நமது கல்விக் கடலான கஸ்தூரி உடலான மகுரிபத்து மெடலான முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் பேரிலும் இன்னுமவர்களின் பந்துமித்திரர்கள் பேரிலும் மற்றும் சர்வ முஸ்லீம் ஆண் பெண்களின் மீதிலும் உண்டாவதாகவும். ஆமீன்.

113068

எனதன்பார்ந்த ஆதம சகோதரர்களே! தற்காலத்தில் அநேக முஸ்லீம் ஜனங்கள் நமது சிறப்பாகிய இஸ்லாம் மார்க்கத்தின் முக்கிய கடமையான தொழுகையின் பருலு, வாஜிபு, சுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம், பாத்தில் முதலியவற்றையும் மேற்படி தொழுகையில் ஓதக்கூடிய வாக்கியங்களின் பொருள்களையும் அறியாது தொழுகின்றனர். அன்னவர்களின் வணக்கத்தை கவனிப்போமாயின் உயிரற்ற உடலுக்குச் சமானமாகும். ஆகையால் அத்தொழுகையின் விஷயமாக அநேக புஸ்தகங்களிருப்பினும், அதிமுக்கியமான விஷயங்களுடன் அதின் சட்ட திட்டங்களும் இன்னுமதில் சதா ஓதக்கூடிய தனு, சூரா, தஸ்பீஹ், தக்பீர், தம்ஜீத், குனூத்து அத்தஹியாத்தும் சில சூராக்களின் பொருள்களும் மற்றவைகளின் அருத்தங்களும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு இச்சிறு நூலை இயற்றினேன். இதைப் படிப்பவர்கள் இதன்படி அமல் செய்வார்கள் என்று வல்ல இறைவனை சதா பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் சொற்பிழை, எழுத்துப்பிழை உண்டாயின் திருத்தி வாசிப்பதோடு இதை இயற்றினவன் மீது துஆ செய்யவேணுமாய் தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

K. M. M.

பிஸ்மில்லாஹி.

யானூர்

# தீனின்

# முக்கிய சட்டதிட்டங்கள்.

## ஈமானுடைய விபரம்.

### ஈமானுடைய பருலுகள் 7.

1. அல்லாஹுத்தஆலாவின்பேரில் ஈமான் கொள்கிறது
2. அவனுடைய மலக்குகளின்பேரில் ஈமான் கொள்கிறது.
3 அவனுடைய வேதங்களின்பேரில் ஈமான் கொள்கிறது
4. அவனுடைய நபிமார்களின்பேரில் ஈமான் கொள்கிறது.
5. கியாமநாளின்பேரில் ஈமான் கொள்கிறது.
6. நன்மை தின்மை அடங்கலும் அல்லாஹுத்த ஆலாவின் நாட்டத்தை கொண்டாயிருக்குமென்று ஈமான் கொள்கிறது.
7. மவுத்தானவர்களை உயிருடன் எழுப்புகிறதின்பேரில் ஈமான் கொள்கிறது.

---

## இஸ்லாமுடைய விபரம்.

### இஸ்லாமுடைய பருலுகள் 5.

1. அஸ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹதஹுலா சரீகலகுவ அஸ்ஹது அன்ன முகம்மதன் அப்துஹு வறசூலுஹு என்னும் கலிமாவை படிக்கிறது.
2. அய்ந்த நேரத்து தொழுகையை நிலைபாடாக தொழுது வருகிறது.
3 ரம்ஸான் மாதம் நோம்பு பிடிக்கிறது.
4. ஜகாத்து கொடுக்கிறது.
5. கஃபதுல்லாவுக்குப்போய் ஹஜ்ஜு செய்கிறது.

## 2-இஸ்லாமுடைய வாஜிபு 7.

1. உம்ரு செய்கிறது.
2. தாய் தந்தைகளுக்கு பணிவிடை செய்கிறது.
3. புருஷனுக்கு பெண்ஜாதி பணிவிடை செய்கிறது.
4. பித்ருடைய சதகா கொடுக்கிறது.
5. குற்பான் கொடுக்கிறது.
6. வித்ரு தொழுகிறது.
7. கொடல்வாய் ஜனங்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்ககிறது.

---

## 3-இஸ்லாமுடைய சுன்னத்து 7.

1. கத்னு செய்கிறது.
2. தலை ரோமம் சிறைக்கிறது.
3. மூக்கு ரோமம் சிறைக்கிறது.
4. உதட்டின்மேல் விழுகிற மீசை ரோமம் எடுக்கிறது.
5. கமுக்கட்டு ரோமம் சிறைக்கிறது.
6. தொப்புளின்கீழ் இருக்கிற ரோமம் சிறைக்கிறது.
7. நகத்தை தரிக்கிறது.

---

# ஒலுவின் விபரம்.

## ஒலுவின் பருலுகள் 4.

1. நெற்றி ரோமத்தின் அருகுமுதல் மோவாயின் கீழ் வரையிலும் ஒரு காதுமுதல் மறுகாது வரை கழுவுவது.

2. இரு கைகளையும் முழங்கை முளிஉள்பட கழுவுவது.

3. தலையில் நாலிலொரு பங்கு தண்ணீரால் மஸஹு செய்வது.

4. இரு பாதங்களையும் கரண்டை முளியுள்பட கழுவுவது, பருலாகும். இவ்வுருப்புகளில் ஒரு ரோமமளவு நனையா விட்டால் ஒலு கூடாது. எந்த மட்டும், தண்ணீர் பட வில்லையோ அந்தமட்டும் கழுவினல் ஒலு துருஸ்தாகிவிடும்.

---

## ஒலுவின் சுன்னத்துகள் 13.

1. ஒலு செய்வதாய் நிய்யத்துச் செய்வது.
2. இரண்டு கரங்களையும் மணிக்கட்டுவரை கழுவுவது.

3. ஒலுச்செய்ய துவக்கும்போது பிஸ்மில்லாஹ் சொல்லுவது.

4. மிஸ்வாக்கைக்கொண்டு பல் துலக்குவது.

5. வாய் கொப்பளிப்பது.

6. நாசிக்குத் தண்ணீர் செலுத்துவது.

7. ஒவ்வொரு உருப்பையும் மூன்று தடவை கழுவுவது

8. தர்த்தீப் என்னும் செய்யவேண்டிய முறைப்படி செய்வது

9. துடர்ச்சியாக கழுவுவதும் அதாவது ஒரு உருப்பு காயுமுன் மறு உருப்பை கழுவுவது.

10. விரல்களைக் கோதிக் கழுவுவது.

11. அடர்ந்த தாடியைக் கோதிக் கழுவுவது

12. தலை முழுவதும் மஸஹு செய்வது.

13. காதுகளை மஸஹு செய்வது

இந்த 13 காரியங்கள் சுன்னத்தாகும். இந்தச் செயல்களில் ஒன்று விட்டுப்போகுமானல் மக்ரூஹ் ஆகிவிடும்.

---

## ஒலுவின் மக்ரூஹ்கள் 7.

1. அசுத்த இடத்திலிருந்து ஒலுச் செய்கிறது.

2. ஒலுச் செய்யும்போது உலக சமாச்சாரங்களைப் பேசுவது

3. முகம் கழுவும்போது கண்களை அழுத்தமாக மூடிக் கொள்வது.

4. தண்ணீரை மிகுதியாக செலவு செய்வது

5. முகத்தை தண்ணீரால் பலமாக அடிப்பது.

6. இடது கையைக்கொண்டு வாய்க்கும் நாசிக்கும் நீர் செலுத்துவது.

7. வலது கையைக்கொண்டு மூக்கை சுத்தம் செய்வது.

---

## ஒலுவின் முஸ்தஹப்புகள் 8.

1. ஒலு செய்பவர் கிப்லா பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்வது.

2. சற்று உயர்ந்த இடத்திலிருந்துகொள்வது.

3. உருப்புகளை கழுவும்போது பிஸ்மில்லாஹ் அல்லது ஷஹாதத்துக் கலிமா ஓதுவது.

4. வலது உருப்புகளைக் கழுவ ஆரம்பிப்பது.

5. பிடரிக்கு மஸஹு செய்வது.

6. தொழுகையின் வக்து வருமுன் ஒலுச் செய்வது.

7. மற்றவர்களின் உதவியின்றி ஒலுச் செய்வது.

8. ஒலு செய்து முடிந்தபின் துஆவுடன் சொற்ப ஜலம் குடிப்பது.

---

## ஒலுவின் முறிச்சல்கள் 9.

1. முன் துவாரம் பின் தூவாரத்திலிருந்து ஏதாவது வெளியாகிறது.

2. புண் காயங்களிலிருந்து இரத்தம், சீழ், சலம் அசுத்த நீர்வடிகிறது.

3. தன்னை மறந்து நித்திரை செய்கிறது ஒரு வஸ்துவின் மீது சாய்து உறங்குகிறது.

4. வாய் நிறைய வாந்தி எடுக்கிறது

5. மதிமயக்கம் உண்டாகிறது.

6. லாகிரி வஸ்துவைக்கொண்டு போதையாகிறது.

7. பைத்தியம் பிடிக்கிறது.

8. இரண்டு வெட்க ஸ்தானங்கள் ஒன்ரோடொன்று சேருகிறது.

9. ஜனஸா தொழுகையைத் தவிர மற்ற தொழுகையில் வெடி சிரிப்பு சிரிக்கிறது.

---

### 3 காரியம் ஒலுவில்லாதவர்கள் செய்தல் ஹராமாகும்.

(1) தொழுகிறது, (2) குர்ஆன்ஷரீபை தொடுவது, (3) கஉபாவை தவாபு செய்வது.

---

## ஒலுச்செய்யும் விதம்.

முதலில் இரண்டு கைகளையும் மூன்றுதடவை மணிக்கட்டுவரை பிஸ்மில்லா சொல்லி கழுவிக்கொண்டு பிறகு பற்களை சுத்தம்செய்து மூன்று தடவை வாய் கொப்பளிக்க வேண்டும். வாய் கொப்பளிக்கும்போது நோன்பில்லாதவர்கள் கர்கரா செய்யவேண்டும். பின்பு வலது கையில் மூன்று தடவை நாசிக்கு நீர் செலுத்தி இடது கையால் நாசியை சுத்தம் செய்யவேண்டும். பின்பு மூன்று தடவை முகத்தை கழுவவும். கழுவும்போது கண்ணிமைகளையும் புருவத்தையும் நன்ருகத் தேய்த்தும் அடர்ந்த தாடி உண்டாயிருந்தால் அதை கோதி கழுவிக்கொண்டு பிறகு வலது கையை முந்தியும், இடது கையை பிந்தியுமாக இரண்டு கைகளையும் முழங்கை முளி உள்பட கழுவி பின்பு இரண்டு கைகளையும் தண்ணீரில்

னைத்துக்கொண்டு பெரு விரல்களையும் கலிமா விரல்களையும் உயர்த்தி கையுடன் மற்ற விரல்களைக்கொண்டு நெற்றி முதல் பிடரிவரையிலும் இழுத்து அப்படியே முன் பக்கம் கொண்டு வந்து மஸஹு செய்து பின்பு கலிமா விரல்களால் இரு காதிற்கு உள்ளிலும், பெரு விரல்களால் காதுக்கு வெளி யிலும் பிறகு கைவிரல்களுடைய முதுகைக்கொண்டு பிடரி யை மஸஹுசெய்து முடித்து கடைசியாக இரண்டு பாதங் களையும் கரண்டை உள்பட வலதுகாலை முந்தியும் இடதுகாலை பிந்தியுமாக கால் விரல்களைக் கோதிக் கழுவி ஒலுவை முடிக்க வேண்டும்.

---

## தயம்மத்தின் விபரம்.

தண்ணீர் சுமார் 1½ மைல் தூரத்திலிருந்தாலும் அல்லது வியாதியால் தண்ணீரானது தேகத்தை அசௌகரியப்படுத்தி னாலும் அல்லது துஷ்ட மிருகங்களின் பயமிருந்தாலும், அல்லது பெருநாள் தொழுகை அல்லது ஜனாசா தொழுகை கிடைக்காதென்று எண்ணமுண்டானாலும் இக்காரணங் களால் ஒலுவிற்கு பகரமாக தயம்மம் செய்துகொள்ளலாம்.

---

## தயமத்தின் பருளுகள் 3.

1. சிறு துடக்கு பொருந்துடக்கு என்னும் அசுத்தத்தை நீக்குவதற்காக நான் தயம்மம் செய்கிறேன் என்று நிய்யத்துச் செய்வது.
2. இருகைகளால் முகத்தை தடவுவது.
3. இருகைகளையும் முழங்கை முளி உள்பட தடவு வது.

---

## தயம்மம் செய்யுமுறை.

சுத்தமான மண்ணில் இருகரங்களையும் சற்று விரித்துக் கொண்டு அடித்து முன்னும் பின்னுமாக இழுத்துக்கொண்டு கையோடுகையை பின்புறமாக தட்டிக்கொண்டு முகமுழுவதும் ஓர் ரோமம் அளவும் விடாமல் தடவிக்கொண்டு மறுபடியும் முன்போல இருகைகளையும் அடித்து எடுத்துப் பின் இடது கையின் நான்கு விரல்களையிம் வலது கையின் பின்புரத்து விரல்களின் நுனிமுதல் முழங்கை வரை இழுத்து மேற்படி இடதுகை உள்புறத்தை மறுபுறமாக தடவி இடதுகை பெரு விரலின்மீது தடவுவதும் இதுபோலவே வலது கையால் இடது கையையும் தடவிக்கொள்ளவேண்டியது.

ஒலுவிற்காக செய்யும் தயம்மமும் முழுக்கிற்காகச் செய்யும் தயம்மமும் ஒரே விதமாகும். ஆனால் இன்ன விஷயத்திற்காக தயம்மம் செய்கிறேன் என்னும் நிய்யத்தும் அதிலுண்டாகவேண்டும்.

ஒலுவை முறிக்கும் காரியங்கள் அனைத்தும் தயம்மத்தை முறித்துவிடும். ஆனால் ஒலுவிற்கு போதுமான தண்ணீர் கிடைத்தாலும் வியாதி சொஸ்தமானாலும் துஷ்ட மிருகங்கள் நீங்கிவிட்டாலும் தயம்மம் முறிந்துவிடும் (மஸ்அலா) தயம்மம் செய்துகொண்டு தொழுகும் இமாமை ஒலுச் செய்தவர்கள் பின் தொடர்ந்து தொழுவது ஜாய்ஸாகும்.

## முழுக்கின் விபரம்.

ஒருவன் தூங்கி யெழுந்தபிறகு தேகத்திலாவது உடையிலாவது சொர்ப்பனத்தால் ஈரத்தைக் கண்டாலும் ஆசையுடன் இந்திரியம் குதித்துவெளியானாலும் பெண்களின் ஹைல் என்னும் மாதவிடை நின்றுவிட்டாலும், நிபாஸ் என்னும் பிள்ளை பிறப்பின் தீட்டு நின்றுவிட்டாலும் முழுக்கு விதியாகிவிடும். இன்னும் சையோகத்தால் ஆண், பெண் இருவர்கள் பேரில் முழுக்கு விதியாகிவிடும்.

## முழுக்கின் பருலுகள் 3.

1. வாய் கொப்பளிப்பது.
2. நாசிக்கு நீர் செலுத்துவது.
3. தேகம் அடங்கலும் நனையக்குளிப்பது தேகத்தில் ஒரு ரோமமளவு நனையாவிட்டால் முழுக்குக்கூடாது ஆனால் சில பாகம் நனையாமல் இருந்தால் பின்பு அந்தப்பாகத்தை மட்டும் தண்ணீரால் கழுவிக்கொண்டால் துருஸ்தாகிவிடும்.

## முழுக்கின் சுன்னத்துக்கள் 5.

1. முழுக்கை நீக்குவதற்காக ஸ்நானம் செய்கிறேன் என்று நிய்யத்துச்செய்வது.
2. வெட்க ஸ்தானத்தை கழுவுவது.
3. தேகத்திலாவது உடையிலாவது நஜிஸ் பட்டிருந்தால் அதை சுத்தம் செய்வது.
4. ஒலுச்செய்துகொள்வது.

5. தண்ணீர் ஊற்றிக் குளிக்கும்போது வலது தோள் இடது தோள் தலை இவைகளின்பேரில் மூன்று தடவை தண்ணீர் ஊற்றிக்கொள்வது.

---

## முழுக்காளிகள் செய்யக்கூடாத காரியங்கள் 5

1. தொழுகிறது.
2. குர்ஆன்ஷரீபை தொடுவது.
3. குர்ஆன்ஷரீபை ஓதுவது.
4. மஸ்ஜிதுக்குள் நுழைவது.
5. கருபாவை (தவாபு) செய்வது.

மாதவிடையான அல்லது பிள்ளைபிறந்த தீட்டு உள்ள பெண்கள், மேல உள்ள ஐந்து காரியத்துடன் புருஷரோடு சையோகம் செய்யவதும், நோம்புபிடிப்பதும் ஆக ஏழுகாரியங்களும் ஹராமாக இருக்கும்.

---

# தொழுகையின் நேரங்கள்.

1. பஜ்ரு :— கிழக்கு வெளுத்தது முதல் சூரியன் உதயமாகும் வரையிலாக இருக்கும்.

2. லுஹர் :— சூரியன் உச்சியில் வந்து அடிசாய்ந்தது முதல் ஒரு வஸ்துவின் நிழல் தன் அசல் நிழலைத்தவிர அவ் வஸ்துவின் நிழல் இரண்டுபங்கு ஆகும் வரையிலாக இருக்கும்.

3. அஸர் :— லுஹருடைய நேரம் சென்றது முதல் சூரியன் மறைகிற வரையிலாக இருக்கும்.

4. மக்ரிப் :— சூரியன் அடைந்தது முதல் செவ்வானம் மறையும் வரையிலாக இருக்கும்.

5. இஷா :— செவ்வானம் மறைந்தது முதல் மெய் வெள்ளை என்னும் கிழக்கு வெளுக்கும் வரையிலாக இருக்கும்

சூரியன் உதிக்கும்போதும், சூரியன் உச்சியிலிருக்கும் போதும், சூரியன் அஸ்தமிக்கும்போதும் தொழுகிறது ஹராமாக இருக்கும்.

---

# பாங்கின் விபரம்.

பாங்கு சொல்வது ஆண்களுக்கு சுன்னத்தாக இருக்கும் கலாவான தொழுகையைதொழுகும்போதும், பாங்கு சொல்லிக் கொள்ளுவது சுன்னத்தாக இருக்கும்.

---

# பாங்கு சொல்லும் விபரம்.

அல்லாஹ் அக்பர் என்று நான்கு தட்வையும் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு என்று இருமுறையும் அஷ்ஹது அன்னமுஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று இரு முறையும், ஹய்ய அலஸ்ஸலாத் என்று இருமுறையும், ஹய்ய அலல்பலாஹ் என்று இரு முறையும் அல்லாஹு அக்பர் என்று இருமுறையும், லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லி முடிக்கவேண்டும். ஆனால் பஜ்ரில் மட்டும் ஹய்ய அலல்பலாஹுக்குப்பின் அஸ்ஸலாத்து கைருன் மினன் நௌம் என்று இருமுறை சொல்லவேண்டும். இன்னும் ஹய்ய அலஸ்ஸலாத் என்று சொல்லும்போது வலது பக்கமும் ஹய்ய அலல்பலாஹ் என்று சொல்லும்போது இடது பக்கமும் முகத்தை மட்டும் திருப்பவேண்டும்.

மஸ்அலா :— இரண்டு பெருநாளின் தொழுகைகளுக்கு பாங்கும் இகாமத்தும் சொல்லுவது கூடாது.

மஸ்அலா :— ஒருவருக்கு பலநேரத்து தொழுகைகள் தவரிப்போய் அதை கலாச்செய்யும்போது முந்தின நேரத்து தொழுகைக்கு மட்டும் பாங்கும் இகாமத்தும் சொல்லிக் கொண்டு மற்றதொழுகைகளுக்கு இகாமத்துமட்டும் சொல்லிக் கொண்டு தொழுதால் போதுமானது.

---

# தொழுகையின் விபரம்

## தொழுகையின் பருலுகள் 13

1. தொழுகையின் நேரத்தை அறிந்துகொள்ளவேண்டும்.
2. தேகம் சுத்தமாக இருக்கவேண்டும்.
3. உடைகள் சுத்தமாக இருக்கவேண்டும்.
4. தொழுகுமிடம் சுத்தமாக இருக்கவேண்டும்.
5. அவ்ரத்தை மறைக்கவேண்டும். அதாவது ஆண்கள் தொப்புளிலிருந்து முழங்கால்வரையிலும் பெண்கள் முகமும் இரண்டு முன்கையும் இரண்டுபாதங்களும் தவிர மற்ற எல்லா தேகத்தையும் மறைப்பதாகும்.
6. கிப்லாவின் திசையில் முகத்தை ஆக்கிக்கொள்ள வேண்டும்.
7. நிய்யத்துச் செய்யவேண்டும். அதாவது மனதில் இன்ன தொழுகையை தொழுகிறேனென்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

8. தக்பீர் தஹ்ரீமா சொல்லவேண்டும். அதாவது முந்தின அல்லாஹு அக்பர்.

9. நிலை நிற்கவேண்டும். அதாவது பருலு தொழுகையிலும் வாஜிபான தொழுகையிலும் பஜ்ரின் சுன்னத்திலுமேயாம்.

10. கிராஅத்து அதாவது குர்ஆன் ஆயத்துகளை ஓத வேண்டும்.

11. ருக்கூஉ செய்யவேண்டும்.

12. ஸஜ்தா செய்யவேண்டும்.

13. தொழுகையின் கடைசி இருப்பில் உட்காரவேண்டும்.

எவர்கள் மேற்கூறிய பருலுகளில் ஒன்றேனும் விட்டுவிடும் பட்சத்தில் தொழுகை கூடாது, திருப்பி தொழுவது கடமையாக இருக்கும்.

---

## தொழுகையின் வாஜிப்கள் 21.

1. முந்தின தக்பீர் தஹ்ரீமாவில் அல்லாஹ் என்னும் வாக்கியத்தோடு அக்பர் என்று சேர்த்து சொல்லுவது.

2. அல்ஹம்து பூரா ஓதுவது.

3. ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்தை சூராவுக்கு முன் ஓதுவது.

4. அல்ஹம்துக்குப் பின் சூரா ஓதுவது அதாவது பெரிய ஆயத்தாக இருந்தால் ஒரு ஆயத்தும், சிறிய ஆயத்தாக இருந்தால் மூன்று ஆயத்துகள் ஓதுவது.

5. அல்ஹம்தை முந்தின இரண்டு ரக்அத்தில் குறிப்பாக்குவது.

6, மெதுவாக ஓதவேண்டிய இடத்தில் மெதுவாக ஓதுவது.

7. இரைந்து ஓதவேண்டிய இடத்தில் இரைந்து ஓதுவது.

8. இமாமை தொடர்ந்தவர்கள் வாய்மூடி கிராஅத்தை கேட்பது.

9. மூன்று அல்லது நான்கு ரக்அத்துடைய தொழுகையில் இரண்டாவது ரக்அத்தில் உட்காருவது.

10. முன்னிருப்பு பின்னிருப்புகளில் அத்தஹிய்யாத்து ஓதுவது.

11. ருக்கூயிலும் ஸஜ்தாவிலும் சிறுநிலையிலும் சிறு இருப்பிலும் ஒரு தஸ்பீஹின் அளவு தாமதித்திருப்பது.

12. ஒவ்வொரு பருலையும் அந்தந்த இடங்களில் செய்து முடிப்பது.

13. ஒவ்வொரு வாஜிபையும் அந்தந்தஇடத்தில் (தர்த்தீபு) முறையாக செய்வது.

14. பருலான தொழுகையில் முந்தின இரண்டு ரக்அத்தில் மட்டும் அல்ஹம்துடன் சூரா ஓதுவது.

15. இமாம் எச்செயல் செய்வாரோ அச்செயலில் பிந்தி வருபவர்கள் துடர்வது.

16. ஸஜ்தாதிலாவத்து செய்வது அதாவது குர்ஆன்ஷரீபில் 14-ஸ்தானங்களில் வருகிற வாக்கியத்தை ஓதினவரும் அதை கேட்பவர்களும் சஜ்தா திலாவத் செய்வதாகும்,

17. வித்ரு தொழுகையில் துஆ குனூத்ஓதுவது.

18. இரண்டு பெருநாள் தொழுகைகளில் அதிகமான ஆறு தக்பீர்கள் சொல்வது.

19. மேற்படி தொழுகையில் இரண்டாவது ரக்அத்தில் ருக்கூஉக்கு முன் தக்பீர் சொல்வது.

20. சலாம் என்னும் வாக்கியத்தைச் சொல்வது.

21. ஸஜ்தாசஹ்வு செய்வது.

ஆகிய இந்த இருபத்தி ஒன்றில் ஒன்றேனும் விட்டுப் போகுமானல் திருப்பித் தொழுவது வாஜிபாகும். சஸ்தாசஹ்வு என்பதுகடைசியிருப்பில் அத்தஹிய்யாத்தில் வரசூலஹு வரை ஓதி வலது பக்கம் ஸலாம் கொடுத்து மறுபடி இரண்டு ஸஜ்தா செய்து பின்பு அத்தஹீய்யாத்தும் ஸலவாத் இபுராஹீமும் துஆயே மாதூராவும் ஓதி இருபக்கமும் ஸலாம் கொடுப்பது.

(மஸ்அலா) ஸஜ்தா சஹ்வு ஏற்பட்டு செய்யாவிட்டால் தொழுகையை திருப்பித் தொழுவது வாஜிபாகும். ஆனல் இமாமை தொடர்ந்தவர்களுக்கு வாஜிப் விட்டுப்போனல் ஸஜ்தாஸஹ்வு செய்யவேண்டியதில்லை.

(மஸ்அலா) பெருநாள்தொழுகையிலும் ஜும்ஆதொழுகையிலும் வாஜிப்கள் விட்டுப்போனலும் ஸ்ஜ்தாசஹ்வு செய்ய வேண்டிய தேவை இல்லை.

(மஸ்அலா) தனித்து தொழுபவர் முந்தின இருப்பில் இராமல் எழுந்துவிட்டால் நேரே நிற்பதற்கு முன் ஞாபகம் வந்தால் உடனே உட்காரவேண்டும். இப்படி ஞாபகமில்லாமல் நேரே நின்றுவிடுவாருனல் உட்காராமல் கடைசியில் சஜ்தாசஹ்வு செய்யவேண்டும்.

## தொழுகையின் ரக்அத்துகளின் விபரம்.

1. பஜ்ரில் சுன்னத்து இரண்டு ரக்அத்தும். பருலு இரண்டு ரக்அத்தும் ஆக 4.

2. லுஹரில்— சுன்னத்து 4 ரக்அத்தும், பருலு 4 ரக்அத்தும், அடுத்த சுன்னத்து இரண்டு ரக்அத்தும், நபில் இரண்டு ரக்அத்தும் ஆக 12.

3. அஸரில் சுன்னத்து நான்கு ரக்அத்தும் பருலு நான்கு ரக்அத்தும் ஆக 8.

4. மக்ரீபில்—பருலு மூன்று ரக்அத்தும் சுன்னத்து இரண்டு ரக்அத்தும் நபில் இரண்டு ரக்அத்தும் ஆக 7.

5. இஷாவில் சுன்னத்து நான்கு ரக்அத்தும் பருலு நான்கு ரக்அத்தும் அடுத்த சுன்னத்து இரண்டு ரக்அத்தும் நபில் இரண்டு ரக்அத்தும் வித்ரு மூன்று ரக்அத்தும் தஸ்பீஹ் நபில் இரண்டு ரக்அத்தும் ஆக 17ம் தொழுகவேண்டியது.

---

## தொழுகையின் சுன்னத்துக்கள் 25.

1. தக்பீர் தஹ்ரீமாவுக்கு கையை உயர்த்துவது.

2. வித்ரு தொழுகையில் விட்டுக்கட்டுவதற்கு கையை உயர்த்துவது.

3. பெருநாள்களின் தொழுகைகளில் தக்பீர்களுக்காக கையை உயர்த்துவது.

4. மேற்கூரிய ஸ்தானங்களில் கைவிரல்களை விரித்து கொள்வது.

5. இடது கையின்மீது வலது கையை வைத்து தக்பீர் கட்டுவது.

6. எழுந்திருக்கும் பொழுதும் உட்காரும் பொழுதும் எல்லா ருக்கூகளிலும் தக்பீர் சொல்லுவது.

7. ருக்கூவில் முழங்கால்களை பிடிப்பது.

8. ஷை ருக்கூவில் கை விரல்களை கொஞ்சம் விரித்து கொள்வது.

9. ருக்கூவிலும் ஸஜ்தாவிலும் மூன்று தரம் அதன் தஸ்பீஹ்கள் ஓதுவது.

10. ஸஜ்தாவில் ஏழு உருப்புகளின்மேல் கனத்தை சமமாக வைப்பது.

11. சிறு நிலை சிறு இருப்புகளில் சற்று தாமதிப்பது.

12. தனா ஓதுவது.

13. அஊது ஓதுவது.

14. பிஸ்மில்லாஹ் ஓதுவது.

15. ஆமீன் என்ற வாக்கியத்தை சொல்வது.

16. தனு அஊது பிஸ்மில்லாஹ் ஆமீன் இவைகளை மெதுவாக ஓதுவது.

17. ஸலவாத்து ஓதுவது.

18. இமாம் தக்பீர்களை ஜனங்கள் கேட்கும்படி பலத்த சப்தமாக சொல்லுவது.

19. இமாம் ஸமிஅல்லாஹ்வலிமன் ஹமிதாஹ் என்று சொல்லுவது.

20. (முக்ததிகள்) - (துயர்ந்தவர்கள்) ரப்பனு வலகல் ஹம்து என்று சொல்லுவது.

21. தனியே தொழுபவர்கள் ஸமிஅல்லாஹ்வலிமன்ஹமிதாரப்பனு வலகல் ஹம்து என்று இவ்விரண்டையும் சேர்த்து ஓதவது.

22. ஆண்கள் இருப்பில் வலதுகாலை நிறுத்தி இடது காலின்பேரில் உட்காருவது.

23. பெண்கள் வலதுகாலையும் இடதுகாலையும் வலது புறமாக்கி ஆஸனத்தின்மீது உட்காருவது.

24. (முக்ததிகள்) இமாமுக்கு முந்தாமலும் சமமாக இல்லாமலும் பின்துயர்ந்து சொல்லுவது.

25. ஸலாம் கொடுக்கும்போது இருபக்கமும் முகத்தை திருப்புவது. இவைகள் அடங்கலும் சுன்னத்தாகும். இவைகளில் ஒன்றையாகிலும் விட்டுவிடும்பக்ஷத்தில் தொழுகை மக்ரூஹ் ஆய்விடும்.

## தொழுகையின் முஸ்தஹப்புகள் 21.

1. ஆண்கள் தக்பீர் தஹ்ரீமாவில் இரு கைகளையும் காதின் சிறுச்சோணைவரை உயர்த்துவது,

2. ஆண்கள் தொப்புழுக்கு கீழேயும் பெண்கள் நெஞ்சின்பேரிலும் கைகளை வைத்து தக்பீர் கட்டுவது.

3. இயன்றவரை குர்ஆனை நன்றாக ஓதுவது.

4. பஜ்ரு தொழுகையில் இமாம் நாற்பது ஆயத்திற்கு குறையாமல் ஓதுவது.

5. சூராவுக்கு முன் பிஸ்மில்லாஹ் ஓதுவது.

6. கிராஅத்தை மூன்று ஆயத்துகளுக்கு அதிகமாய் ஓதுவது.

7. பருலு தொழுகைகளில் பிந்தின இரண்டு ரக்அத்தில் அல்ஹம்துமட்டும் ஓதுவது.

8. நிலையில் இருகால்களின் மத்தியில் நாலு விரல் விஸ்தீரணம் உண்டாக்கிக்கொள்வது.

9. வலமிடம் திரும்பாமல் இருப்பது.

10. இயன்றவரை கொட்டாவியையும் இருமலையும் தடுப்பது.

11. ருக்கூவில் முதுகை ஆஸனத்திற்கு சமமாக செய்வது.

12. ஸுஜூதில் ஏழு உறுப்புகளையும் முறையாக வைப்பது.

13. ஸுஜூதை விட்டெழும்பும்போது அதின் ஒழுங்கின் படி உறுப்புகளை எடுப்பது.

14. ஸஜ்தாவில் விரல்களை கிப்லாவுக்கு நேராக்கிக் கொள்வது.

15. தனியே தொழுபவர் தஸ்பீஹை மூன்றுக்குமேல் 5, 7, 9, 11-வரை அதிகமாக்கிக்கொள்வது.

16. ஸஜ்தாவில் இருகைகளையும் காதுகளுக்கு நேராக வைப்பது.

17. ஆண்கள் ஸஜ்தாவில் இரண்டு புஜங்களை விலாவை விட்டும் வயிற்றை தொடையை விட்டும், தொடையை கெண்டைக்காலை விட்டும், கெண்டைக்காலை பூமியைவிட்டும், நீக்கிவைப்பது.

18. பெண்கள் மேல்கூறிய உறுப்புகளை சேர்த்துவைப்பது.

19. இருப்புகளில் இருகைகளை தொடையில் வைப்பது.

20. ஸலாம் சொல்லும்போது முகத்தை நன்றாய் திருப்புவது.

21. இமாமுடன் முந்தின ரக்அத்தில் சேராதவர்கள் இமாம் கடைசியில் இருபக்கமும் ஸலாம் கொடுத்தபின் எழுந்திருப்பது முஸ்தஹப்புகளாகும். இவைகளில் ஒன்றேனும் விட்டுவிடும் பட்சத்தில் தொழுகையின் நன்மை குறைந்துவிடும்.

---

## தொழுகையின் மக்ரூஹ்கள் 26

1. தொழுபவர் ஒரு ருக்னில் இரண்டு செயல் செய்வது.

2. வலமிடமும் முன் பக்கமும் அண்ணாந்து பார்ப்பது.

3. நெற்றியில் பட்ட மண் தூசி முதலியவற்றை துடைப்பது.

4. ஆடைகளை தோளின்மேல் போட்டு இரு பக்கத்தில் தொங்கவிடுவது.

5. ருக்கூவில் தலையையும் ஆசனத்தையும் சமமில்லாமல் வைப்பது.

6. அசைவது.

7. சோம்பலால் தேகத்தை வளைப்பது.

8. கொட்டாவி வந்தால் வாய் மூடாமலிருப்பது.

9. கண்களை மூடிக்கொள்வது.

10. விரல்களை நெட்டி முறிப்பது.

11. பட்டு ஆடைகளை கட்டிக்கொண்டு தொழுவது.

12. தலையை திறந்துகொள்வது.

13. யாதொரு வஸ்துவை முகர்வது,

14, முந்தின ரக்அத்தில் கீழ் ஆயத்தும் இரண்டாவது ரக்அத்தில் மேல் ஆயத்துகளையும் பருலான தொழுகையில் ஓதுவது,

15. பருலு தொழுகையில் முந்தின ரக்அத்தில் சிறிய சூராவும் பிந்தின ரக்அத்தில் பெரிய சூராவும் ஓதுவது.

16. ஆயத்துகளை வேகமாக ஓதுவது.

17. பருலு தொழுகையில் ஒரு சூராவை மடக்கி ஓதுவது.

18. ஸஜ்தா செய்யும்போது முழங்கைகளை தரையில் படுக்க வைப்பது.

19. ஆண்கள் தலையில் நீளமாக ரோமங்கள் வளர்ந்திருந்தால் அதை கொண்டைப்போட்டுக்கொள்வது.

20. ஸஜ்தா செய்யப்போகும் சமயம் முந்தி கைகளை பூமியில் வைப்பது.

21. ஸஜ்தாவை விட்டு எழும்பும்போது முந்திமுழங்காலைத் தூக்குவது.

22. தலைப்பாகையின்மீது ஸஜ்தா செய்வது.

23. ஸஜ்தாவில் தொடையுடன் வயிற்றை சேர்ப்பது.

24. தொழுகுமிடத்தில் உயிருள்ள உருவப்படங்களை வைப்பது.

25. ஆண்கள் தொழுகையில் சிவப்பு, மஞ்சள் நிறமுடைய துணிகளை அணிவது.

26. சப்தமில்லாமல் புன்சிரிப்பு சிரிப்பதும், தொழுகையின் மக்ரூஹ்களாம். தொழுகையில் மக்ரூஹான காரியங்கள் ஏற்பட்டால் சிறிய பாவமும் நன்மை குறைவும் உண்டாகும்.

---

## தொழுகையின் முறிச்சல்கள் 17.

1. தொழுகிறவன் ஞாபகத்தோடு பேசினாலும் அல்லது மறந்து பேசினாலும்.

2. அன்னியர்கட்கு ஸலாம் சொன்னாலும், அல்லது சலாமிற்கு பதில் சொன்னாலும்.

3. துக்ககரமான விஷயத்திற்கு பதில் இன்னுலில்லாஹி கூறினுலும்.

4. சந்தோஷமான விஷயத்திற்கு பதில் லாஹவ்ல் வலாகுவ்வத சொன்னுலும்.

5. தும்மினவருக்கு பிரதி பதில் சொன்னுலும்.

6. கடலே பருமமுள்ள வஸ்து பல்லில் ஒட்டினதை விழுங்கினுலும்.

7. கொஞ்சமாக தின்றுலும் கொஞ்சமாக குடித்தாலும்.

8. உலக ஆபத்தால் சப்தம் வெளியாகும்படி அழு தாலும்.

9. அச்சரம் வெளியாகும் விதம் அஹ், இஹ். இக். உக் என்று சப்தமிட்டாலும்,

10. தன் இமாமைத்தவிர மற்றவர் ஓதும் பிழையை திருத்திக்கொடுத்தாலும்.

11, இமாம் தன்னே பின்பற்றினவர்களேத் தவிர மற்றவர் களின் பிழை திருத்தத்தை கேட்டு ஓதினுலும்,

12, குர்ஆன் ஷரீபின் அயத்துகளே பார்த்து ஓதினுலும்,

13, ஸஜ்தாவில் கால்விரல்களே பூமியில் படாமல் உயர்த் திக்கொண்டாலும்,

14, ஸஜ்தா செய்யும்போது நெற்றியை பூமியில் படாமல் செய்தாலும்,

15, இமாமுடன் சேர்ந்து தொழுபவன் இமாமுக்கு முந்தி நின்று தொழுதாலும்,

16, ஒரு செயலே மூன்று தரம் செய்தாலும்,

17, தன் காதுக்கு கேட்கும்படி வெடிசிறிப்பு சிறித்தாலும் தொழுகை முறிந்துவிடும், திருப்பி தொழுவது பர்லாக இருக்கும்,

---

## தொழுகவேண்டிய முறை.

தொழுகிறவன் மேற்கூறிய பர்லு வாஜிப் சுன்னத்து முதலிய ஸகல காரியங்களேயும் தெரிந்து மிக்க பேணுதலாக கிப்லாவின் பக்கம் முகத்தை திருப்பி நின்றவனுக நிய்யத்துச் செய்யவும் அதாவது சுன்னத்துத்தொழுகிறவன் அல்லாஹ்வுக் காக இத்தனே ரக்அத்து தொழுகிறேன் என்றும், பர்லு தொழுகையாயின் அல்லாஹ்வுக்காக இன்ன நேரத்து தொழுகை இத்தனே ரக்அத்து தொழுகிறேன். என்றும், வித்ரு தொழுகையானுல் இந்த இரவின் வித்ரை அல்லாஹ்வுக் காக தொழுகிறேன் என்று மனதில் நிய்யத்துச் செய்து

கொள்ளவும். ஆனல் வாயால் சொல்வது முஸ்தஹப்பாக இருக்கும். இனி இமாமுடன் சேர்ந்து தொழுபவர்கள் இந்த இமாமை துயர்ந்து தொழுகிறேன் என்னும் வாக்கியத்தை சேர்த்துக்கொள்ளவும். பிறகு இரண்டு கைகளின் பெருவிரலினுல் இருகாதுகளின் சிறுசோனேயை தொட்டு உள்ளங்கைகளை கிப்லாவின் பக்கம் திருப்பி மற்ற விரல்களை கொஞ்சம் விறித்துக்கொண்டு அல்லாஹு அக்பர் என்று சொல்லி முடித்து தொப்புளுக்கு கீழே இரண்டு கைகளேயும் கொண்டுவந்து இடது கையின்பேரில் வலது கையை வைத்து இடதுகையின் மணிக்கட்டை வலதுகையின் சுண்டுவிரலாலும் பெருவிரலாலும் பிடித்து வலது கையினுடைய மற்ற மூன்று விரல்களேயும் இடதுகையின்மேல் வைத்து கட்டிக்கொள்ளவேண்டும்.

இப்படி கட்டுவதற்கு தக்பீர் தஹ்ரீமா என்று சொல்லப்படும். ஆனல் பெண்கள் கைகளை தோள்வரை உயர்த்தி விரலேத் திறக்காமல் நெஞ்சின்மீது கட்டிக்கொள்ளவேண்டியது. இமாமுடன் சேர்ந்த தொழுபவர்கள் இமாமின் தக்பீர் முடிந்தவுடன் இவர்கள் தக்பீரை ஆரம்பிக்கவேண்டும். இமாம் பலமாக தக்பீரைச் சொல்லுவாராஞல் முக்ததிகள் பின் துடர்ந்தவர்களும் தனியே தொழுபவர்களும் மெதுவாக தக்பீர் சொல்லிக்கொள்ளவேண்டும். இரண்டு கால்களின் மத்தியில் நான்கு விரல் அளவு விஸ்தீரணம் இருக்கவேண்டும். பெண்கள் இரு பாதங்களேயும் சேர்த்து வைக்கவேண்டும். தொழுகிறவர்களின் பார்வை ஸஜ்தாசெய்யும் ஸ்தலத்தில் இருக்கவேண்டும். மேல்கூறியவாறு நின்று தக்பீர் கட்டியபின் தஞ ஓதவேண்டியது, அதாவது சுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வத்தஆலாஜத்துக வலாயிலாஹ கைருக என்று ஓதிய பிறகு அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர்ரஜீம்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிற்றஹீம் என்று ஓதியபின் அல்ஹம்த சூராவும் ஓதி தக்பீர் சொல்லிக்கொண்டு ருக்கூஉ செய்யவும், ஆனல் இமாமை தயர்ந்தவர்கள் தஞவும், ஆமீனும் தவிர மற்றவைகளை ஓதாமல் இருக்கவேண்டும். ருக்கூயில் விரல்களை விறித்தவஞக முழங்காலே பிடித்துக்கொண்டு கண்பார்வை பாதங்களின்பேரில் வைக்கவேண்டும். கைகளேயும் கால்களேயும் மடக்காமல் நேராய் வைத்து தலேயை இடுப்புக்கு சமமாக வைக்கவேண்டும். ஆனல் பெண்கள் அதிகம் குனியவேண்டியதில்லே. உடம்பு முழுவதையும் முழங்கால்களேயும் சற்று வளேத்தும் கைவிரல்களை விரிக்காமல் வைத்துக்கொள்ளவேண்டும் இவ்வாறு குனிந்துகொண்டு

சுப்ஹானரப்பியல் அலீம் என்று மூன்று அல்லது ஐந்து தடவை மெள்ள ஓதவேண்டும். பிறகு ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா என்று சொன்னவனுக சிரசை உயர்த்தல்வேண்டும். கைகளை தொங்கவிட்டு நிமிர்ந்து நின்றவுடன் அல்லாஹும்ம ரப்பனு வலகல் ஹம்து என்று சொல்லவேண்டும். இமாமை துயர்ந்தவர்கள் ரப்பனுவலகல் ஹம்து என்று மட்டும் சொல்லுவது போதும். பின்பு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு நேராக உட்கார்ந்து முதலில் முழங் காலை தரையில் வைத்து பின்பு உள்ளங்கைகளையும், பிறகு மூக்கையும், பின்பு நெற்றியையும் தரையில் படும்படி வைத்து ஸஜ்தா செய்யவும் அப்போது கைவிரல்களை சேர்த்து கிப்லாவிற்கு நேராக நீட்டி காதுகளுக்கு நேரில் இரு பெரு விரல்களும் இருக்கும்படி வைக்கவேண்டும், கால்கள் நிறுத் தப்பட்டு விரல்களை கிப்லாவின் பக்கமாக வைக்கவேண்டும். இரண்டு புஜங்களும் விலாவை விட்டு அகட்டிவைக்க வேண் டியது. வயிறு தொடையை விட்டும் தொடைகள் கெண்டைக் காலை விட்டும் நீக்கி வைத்து கண் பார்வை மூக்கின் பேரில் இருக்கவேண்டும். இவ்வாறு செய்வதில் முதுகு வளைந்து இருக்ககூடாது. தேகத்தின் கனமானது எல்லா உறுப்புகளின் பேரில் சமமாக இருக்கவேண்டும். அப்போது மூன்று அல்லது ஐந்து தடவை சுப்ஹான ரப்பியல் அவுலா என்று மெள்ள ஓதவேண்டும். ஆனல் பெண்கள் அவர்களின் சர்வ உறுப்பு க்களையும் ஒடுக்கி இரண்டு பாதங்களையும் வலது பக்கம் விட்டு விடவேண்டும். பிறகு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு நிமிர்ந்து மண்டிபோட்டு உட்கார வேண்டும். அப்போது முழங்காலின் பேரில் உள்ளங்கைகளை வைத்து ஒரு தஸ்பீஹ் ஓதும் நேரம்வரை இருந்து பிறகு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் ஒரு முறை முன்போல் ஸஜ்தா செய்யவேண்டும். பின்பு அல்லாஹு அக்பர் என்று மொழிந்து கைகளை பூமியில் ஊன்ருமல் முழங் கால்களின் மீது கையைவைத்து கால்களின்பேரில் பாரத்தை வைத்தவனுக உட்காராமல் நேராக எழுந்து நிற்கவேண்டியது. இதுவே தொழுகையில் ஒரு ரக்அத்து ஆகிறது. இவ்விதம் நின்ற பிறகு தனுவும் அஊதும் ஓதாமல் பிஸ்மில்லாஹ்வுடன் அல்ஹம்து சூராவும் ஓதி முந்தின ரக்அத்துபோல் தொழுக வேண்டியது. இவ்வாராக இரண்டாவது ரக்அத்தின் இரண்டு ஸஜ்தாவும் செய்தபின் முன்போல் உட்காரவேண்டியது. அதா வது இடதுகாலை படுக்கவைத்து அதன்பேரில் ஆஸனம் வைத்து உட்கார்ந்து வலது காலை நிறுத்தி மேற்படி கால் விரல்களை கிப்லாவின் பக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். கைவிரல்களை சற்று விறித்து தொடையின்மீது வைக்கவும்.

ஆனால் பெண்கள் இரண்டு பாதங்களையும் வலது பக்கம் விட்டுவிட்டு ஆஸனத்தை பூமியில் வைத்து இருக்கவேண்டும். கைவிரல்களை சேர்த்தும் கண்களின் பார்வை மடியின்மீது வைத்தவனாக அத்தஹிய்யாத் ஓதவேண்டியது. அத்தஹிய்யாத்தில் லா என்று சொல்லும்போது வலதுகையின் கலிமா விரலை உயர்த்தி இல்லல்லாஹு என்று ஓதினவுடன் அவ் விரலை கீழேவைத்து விடவேண்டும் மூன்று அல்லது நான்கு ரக்அத்துக்கள் தொழவேண்டுமானால் அத்தஹியாத்தில் அப்துஹு வரசூலுஹு வரை ஓதி எழுந்து முன்போல தொழ வேண்டியது. ஆனால் பர்லு தொழுகையாக இருந்தால் பிந்தின இரண்டு ரக்அத்தில் அல்ஹம்துமட்டும் ஓதவேண்டும். சுன்னத் தான தொழுகையில் நான்கு ரக்அத்திற்கும் அல்ஹம்து சூரா வும் ஓதவேண்டும். இவ்விதம் 2 அல்லது 3 அல்லது 4 ரக் அத்தாக தொழுது முடிந்தபின் முன்போல கடைசி இருப்பில் அத்தஹியாத்தும் தரூதே இப்ருஹீமும் துஆயே மாதூராவும் ஓதி பின்பு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி என்று சொல்லிக்கொண்டு வலதுபக்கம் முகத்தை திருப்பவேண்டும். அப்படியே சலாம் சொல்லிக்கொண்டு இடது பக்கமும் முகத்தை திருப்பவேண்டும். ஆனால் இமாம் முந்தின சலாமின் சப்தத்தை சற்று இறைந்தும் பித்தின ஸலாமை கொஞ்சம் மெதுவாகவும் சொல்லவேண்டியது இனி இரவின் வித்ரு தொழுகையை தொழும்போது மூன்றுவது ரக்அத்தில் அல்ஹம்து சூராவும் ஓதின பிறகு இரண்டு கைகளையும் உயர்த்தி தக்பீர் தஹ்ரீமா கட்டுவதுபோல் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டிக்கொண்டு துஆ குனூத் ஓதவேண்டும். தெரியாதவர்கள் ரப்பனா ஆத்தினா வென்னும் துஆவை ஓதி னாலும் போதும்.

---

## ஜும்ஆ தொழுகையின் விபரம்.

ஜும்ஆ வென்னும் வெள்ளிக்கிழமையன்று குளித்து இயன்றவரை நல்லாடைபூண்டு வாஸனை பூசிக்கொண்டு தொழுகவேண்டியது. ஜும்ஆவின் பாங்கு சொன்னபிறகு வியாபாரம் முதலியவைகள் செய்வது ஹராமாய் இருக்கும். ஜும்ஆ எழுவகைக் கூட்டத்தினர் மீது கடமை இல்லை.

1. ஒரு ஊரில் 15 நாட்கள் இராமல் பிரயாணம் செய்ப வர்கள்.

2. சிறைச்சாலையில் அடைபட்டவர்கள்.

3, விரோதிகளின் பயத்தால் வெளியில் வரமுடியாத வர்கள்.

4. நடக்கமுடியாத நொண்டிகள்.

5. இரண்டு கண் பார்வையற்றவர்கள்.

6. அதிக வியாதியுள்ளவர்கள்.

7. பெரும் மழையாலும் சேறு முதலியவற்ருல் கஷ்டப் படுபவர்கள்.

(தொழுகையின் முறை) ஜும்ஆ தொழுக பள்ளியில் நுழைந்தவுடன் ஒலு நபில் இரண்டு ரக்அத்தும் மஸ்ஜிது நபில் இரண்டு ரக்அத்தும் சுன்னத்துல் ஜும்ஆ நான்கு ரக் அத்தும் தொழுது உட்கார்ந்து தூங்காமல் குத்பாவை கேட்க வேண்டும். பிறகு இமாமுடன் பர்லு இரண்டு ரக்அத்து தொழுத பின்னர் ஜும்ஆவின் சுன்னத்து நான்கு ரக்அத்தும் வக்திய்யா சுன்னத்து இரண்டு ரக்அத்தும் நபில் இரண்டு ரக்அத்தும் தொழுகவேண்டியது.

---

## பெருநாள் தொழுகையின் வியரம்.

எவர்கள்மீது ஜும்ஆ தொழுகை விதியாகுமோ அவர்கள் மீது பெருநாள் தொழுகை விதியாகும். அதாவது வாஜிபாகும் ஜும்ஆவில் குத்பா ஓதுவது பர்லாகும். பெருநாள் தொழுகை யின் குத்பா சுன்னத்தாகும். இந்த பெருநாட்களில் ஸ்நானம் செய்வதும் இயன்ற மட்டும் நல்ல உடைகள் அணிவதும் வாசனை பூசுவதும் சுன்னத்தாகும். பெருநாள் தொழுகையின் நேரமாவது சூரிய உதயமுதல் அடி சாய்கிறவரையிலாக இருக்கும். அதாவது சுமார் $11\frac{1}{2}$-மணிவரை தொழுது கொள்ளலாம், நோம்பு பெருநாள் தொழுகையை பெரும் ஆபத்தான காரணத்தால் அடுத்தநாள் தொழுதுகொள்ளலாம். ஹஜ்ஜு பெருநாள் தொழுகையை பெரும் ஆபத்துகளின் காரணங்களால் பிந்தின மூன்று நாள்வரை தொழுதுகொள் வது ஜாயிசாகும். நோம்பு பெருநாளில் தொழுகப்போவதற்கு முந்தி ஏதாவது இனிப்பு பதார்த்தமும், ஹஜ்ஜு பெருநாளில் ஒன்றும்உண்ணுமல் தொழுகைக்குப்பின் குர்பானி மாமிசத்தை சாப்பிடுவது முஸ்தஹப்பாகும்.

இந்த பெருநாள் தொழுகை வாஜிபாகிய இரண்டு ரக்அத்தை ஆறு தக்பீர்களுடன் இந்த இமாமைத் துடர்ந்து அல்லாஹுத்த ஆலாவுக்காக தொழுகிறேன் என்று நிய்பத்துச் செய்துகொண்டு தக்பீர் தஹ்ரீமா கட்டி தனு ஓதியபின் இரண்டு தடவை அல்லாஹு அக்பர் என்று சொல்லிக் கொண்டு இரண்டு தடவையும் கைகளை உயர்த்தி கீழே தொங்கவிட்டு மூன்ருவது தக்பீருடன் கைகளை கட்டிக் கொள்ளவேண்டும், பின்பு இரண்டாவது ரக்அத்தில் ருக்கூஉ

செய்யுமுன் முன்சொன்ன விதமாக மூன்று தடவை தக்பீர்கள் சொல்லி நான்காவது தக்பீரை சொல்லிக்கொண்டு ருக்கூஉக்கு போய்விடவேண்டும், மற்ற தொழுகைகளைப்போல் இதையும் தொழுத பின்னர் குத்பாவை கவனத்துடன் கேட்பது வாஜிபாகும்.

---

## ஜனுஸா தொழுகையின் விபரம்.

யாருக்காவது மவுத்தின் குறிகள் காணப்படுமானுல் தன் குற்றங்களுக்கு ஆண்டவனிடம் பிழைபொறுக்கத் தேடவேண்டும், இன்னும் சமீபத்திலிருப்பவர்கள் கலிமாவையும் யாசீன் சூரா முதலியவற்றை சப்தத்தோடு ஓதவேண்டும். முகத்தை கிப்லா பக்கமாக ஆக்கவேண்டும். அசுத்தமான ஸ்திரீ புருஷர்கள் அவ்விடமிருந்தால் நீங்கவேண்டும். மரணமடைந்த பின்னர் சீக்கிரம் குளிப்பாட்டுவதும் கபனிடுவதும் வாஜிபாகும்.

ஜனுஸாவை தொழுகவைப்பதும் அடக்கம் செய்வதும் பர்லு கிபாயாவாகும் ஜனுஸா தொழுகையின் நிய்யத்து அதாவது தொழுகை ஆண்டவனுக்கும், துஆ மையித்திற்கும் நான்கு தக்பீர்களுடன் இந்த இமாமை பின்துயர்ந்து தொழுகிறேன் என்ற நிய்யத்துடன் அல்லாஹு அக்பர் என்று மற்ற தொழுகைகளைப் போல் தக்பீர் கட்டிக்கொண்டு தனு ஓதவேண்டியது. ஆனுல் வத ஆலாஜத்தக என்று ஓதியபின் வஜல்லதனுஉக என்னும் வாக்கியத்தையும் சேர்த்து ஓதவேண்டும். பிறகு இரண்டாவது தடவை அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொன்னபின் அத்தஹிய்யாத்தில் ஓதும் ஸலவாத்தே இப்ராஹீமை ஓதிய பிறகு மூன்ருவது தடவை அல்லாஹு அக்பர் என்று சொன்னபிறகு அல்லாஹும்மக்பிர் லிஹய்யினு வமய்யிதினு வஷாஹிதினு வகாயிபினு வஸகீரினு வகபீரினு வதகரினு வஉன்தானு அல்லாஹும்மன் அஹ்யய்தஹு மின்னுவஅஹ்யிஹி அலல் இஸ்லாம் வமன்தவப்பய்தஹு மின்னுபதவப்பஹு அலல்யீமான் என்ருேதி நான்காவது தக்பீர் சொல்லியபின் ரப்பனு ஆதினு பித்துன்யா ஹஸனதன்வபில் ஆகிறதிஹஸனதன் வகினு பிறஹ்மதிக அதாபல் கப்ரிவஅதாபன்னர் என்று ஓதி ஸலாம் சொல்லவேண்டியது, மூன்ருவது தக்பீரில் படித்த துஆவின் பொருள்:— ஆண்டவனே எங்களில் ஜீவித்திருப்பவருக்கும் மரண மடைந்தவர்களுக்கும் பக்கத்திலிருப்பவர்களுக்கும் மறைந்த இருப்பிவர்களுக்கும் சிறியோர் பெரியோர்களுக்கும் ஸ்திரீ புருஷர்களின் குற்றங்களை மன்னித்து ரக்ஷிப்பாயாக. ஆண்டவனே நீ எங்களில் யாரை ஜீவித்திருக்கச்

செய்தாயோ அவர்களை இஸ்லாத்தின்பேரிலும் இன்னும் எங்களில் யாரை மரணமடையச்செய்வாயோ அவர்களை ஈமானின் பேரிலும் மரணமடையச்செய்வாயாக.

**நான்காவது தக்பீரில் ஓதிய துஆவின்பொருள்:** எங்கள் ஆண்டவனே இம்மையில் சகல பாக்கியத்தையும் மறுமையில் சகல பாக்கியத்தையும் கொடுத்து கபுரின் வேதனையிலிருந்தும் நரகத்தின் வேதனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக,

**மஸ்அலா :—** ஒருவனுக்கு ஜனுஸா தொழுகையில் ஒன்று, இரண்டு தக்பீர்கள் தவறிவிடுமானுல் இமாம் ஸலாம் கொடுத்தபின் மீதியுள்ள தக்பீர்களை தானுகவே சொல்லிக் கொண்டு ஸலாம் கொடுக்கவேண்டியது.

**மஸ்அலா :—** எவருக்கு ஜனுஸா தொழுகை கிடைக்காதென்று எண்ணமுண்டாகுமோ அவர் தயம்மம் செய்து கொண்டு இமாமுடன் சேர்ந்து தொழுகலாம். ஆனுல் ஜனுஸாவின் முக்கிய சொந்தக்காரராக இருந்தால் தயம்மம் செய்து தொழுவது கூடாது.

---

## பாங்கின் பொருளும் தொழுகையில் ஓதக்கூடியவைகளின் பொருள்களின் விபரம்.

அல்லாஹு அக்பர் ஆண்டவன் மிகவும் பெரியவன். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு உண்மையாக சாக்ஷி சொல்லுகிறேன். திட்டமாக வணக்கத்திற்கு தகுதியானவன் ஆண்டவனைத்தவிர யாருமில்லை. அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூலுல்லாஹி உண்மையாக சாக்ஷி சொல்லுகிறேன். திட்டமாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹுத்தஆலாவின் உண்மை தூதராக இருக்கும். ஹய்ய அலஸ்ஸலாத் தொழுகைக்காக வருவீர்களாக. ஹய்ய அலல் பலாஹ் ஜெயமடைவதற்கு வருவீர்களாக. அஸ்ஸலாத்து கைரும்மினன்நவ்ம் தொழுகையாகிறது தூக்கத்தைவிட மேன்மையானதாகும். அல்லாஹு அக்பர் லாயிலாஹ இல்லல்லாஹு வணக்கத்திற்குறியவன் யாருமில்லை அல்லாஹுத்தஆலாவைத்தவிர கதுகாமதிஸ்ஸலாத் திட்டமாக தொழுகை நிலைத்துவிட்டது.

---

## தஹுவின் மஅனு

சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக. ஆண்டவனே நீ துய்யவன் உன் புகழால் உன்னை புகழுகிறேன். வதபாரகஸ்முக உன் திருநாமம் மேன்யுடையது. வதஆலா ஜத்துக உன் மேன்மை மிகவும் உன்னதமானது, வலாயிலாஹ கைருக உன்னைத்தவிர வணக்கத்திற்கு தகுந்தவன் யாருமில்லை.

---

## அவூது பிஸ்மில்லாவின் மஅனு

அஊது பில்லாஹிமினஷ் ஷைதானிர் ரஜீம் நீக்கப்பட்ட சைத்தானிடமிருந்து காப்பிற்றி ரக்ஷிக்கவேண்டுகின்றேன். பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிற்றஹீம் இம்மையில் யாவர்கட்கும் கிருபை செய்பவனும் மறுமையில் விஸ்வாசிகளுக்கு மட்டும் கிருபை செய்பவனுமான ஆண்டவனின் நாமத்தால் ஆரம்பிக்கின்றேன்,

---

## அத்தஹிய்யாத்தின் மஅனு.

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்துவத்தையிபாத்து நாவால் துதிக்கக்கூடிய சரீரத்தால் உண்டாகக்கூடிய பொருளால் அமையக்கூடிய சர்வ வணக்கங்களும் ஆண்டவனுக்கே உண்டாவதாக. அஸ்ஸலாமு அலைக அய்யு ஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு ஓ நபியே உங்கள் பேரில் ஈடேற்றமும் அல்லாஹுவின் கிருபையும் அதி விசேஷமும் உண்டவதாக. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் எங்கள் பேரிலும் ஆண்டவனின் ஈடேற்றம் உண்டாவதாக. அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹுவஅஷ்ஹதுஅன்னமுஹம்மதன் அப்துஹு வரசூலுஹு நான் உண்மையாக சாக்ஷி சொல்லுகிறேன். வணக்கத்துக்குறியவன் ஆண்டவனைத்தவிர யாருமில்லை. திட்டமாக முஹம்மது (ஸல்) அவர்கள் ஆண்டவனின் அடியாரும் தூதருமாக இருக்கும்.

அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின்வஅலா ஆலிமுகம்மதின் நாயனே முகம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் பந்துக்கள் மீதும் கிருபை செய்வாயாக. கமாஸல்லைத அலா இப்ராஹீமவஅலாஆலி இப்ராஹீம எவ்விதமெனின் நீ இப்ராஹீம் (அலை) அவர்களின் மீதும் அவர்கள் பந்துக்கள் மீதும் கிருபை செய்தாயே அவ்விதமாக இன்னகஹமீதுன் மஜீது திட்டமாக நீ புகழுக்குறியவனாகவும் மகிமை வாய்ந்தவனாகவும் இருக்கருய்

அல்லாஹும்மபாரிக் அலாமுகம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் நாயனேமுஹம்மது(ஸல்)அவர்களின்மீதும் அவர்கள்பந்துக்கள் மீதும் அதிகமான பாக்கியத்தை அளிப்பாயாக. கமாபாரக்த அலா இபுராஹீம வஅலா ஆலி இபுராஹீம எவ்விதமென்றால் நீ இபுராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்கள் பந்துக்கள்மீதும் அதிகமான பாக்கியத்தை அளித்ததுபோல் இன்னகஹமீதுன் மஜீது. திட்டமாக நீ யாகிறவன் புகழுக்கும் கீர்த்திக்கும் தகுமானவன்.

அல்லாஹும்மஉபிர்லீவலிவாலிதய்யவலிஉஸ்தாதிய்யவலிஜமி உல்முமீனீனவல்மூமினாத் வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத்பிரஹ்மதிக யாஅர்ஹமர்ராஹிமீன். நாயனே! நீ எனக்கும் என் மாதா பிதாக் களுக்கும் என் உபாத்தியாயருக்கும் மூமினான சர்வ ஆண் பெண்களுக்கும் முஸ்லீமான சகல ஆண் பெண்களுக்கும் உன் கிருபையால் பிழை பொறுப்பாயாக. ஒ! கிருபையாளர்களுக் கெல்லாம் மகா கிருபையாளனே!

---

## குனூத் துஆவின் மஅனா

அல்லாஹும்ம இன்னா நஸ்தயீனுக வநஸ்தஉபிருக வனுமினுபிக. நாயனே! திட்டமாக நாங்கள் உன் உதவியையும் உன் மன்னிப்பையும் தேடுகிறோம். இன்னும் உன்பேரில் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். வநதவக்கலு அலைக வநுத்னி அலைகல்கைர உன்மீது பொறுப்பு சாட்டுகிறோம். இன்னும் உன்னத விதமாக உன்னை துதிக்கின்றோம். வநஷ்குருக வலாநக் புருகவநகுலஉவனத்ருகு மன்யப் ஜுர்க இன்னும் உனக்கு நன்றி செலுத்துகின்றோம். இன்னும் நாங்கள் மாறுதல் செய்பவர் களல்ல. இன்னும் உனக்கு வழிப்படாதவர்களை நாங்கள் வெறுத்து நீக்கிவிடுகிறோம் அல்லாஹும்ம இய்யாக நஉபுது வலகநுஸல்லி ஒ! ஆண்டவனே உன்னையே வணங்குகிறோம். இன்னும் உன்னைத் தொழுகிறோம். வநஸ்ஜுதுவஇலைகநஸ் ஆநஹபிது வநர் ஜுரஹ்மதக இன்னும் சாஷ்டாங்கம் செய் கிறோம், உன்னிடமே வேகமாக ஓடுகிறோம். நாங்கள் அஞ்சு கிறோம் இன்னும் உன்கிருபையை ஆதரவுவைகின்றோம். வநகுஷா அதாபக இன்ன அதாபக பில்குப்பாறி முல்ஹிக் உன் வேதனைக்கு பயப்படுகின்றோம். ஏனென்றால் திட்டமாக உன் வேதனை மாறுதல் செய்பவர்களைப்பற்றி பிடித்துக்கொள்ளும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி ஆண்டவனின் ஈடேற்றமும் கிருபையும் உங்கள்பேரில் உண்டாவதாக.

---

## சூரத்துல் பீல்மக்கிய்யா ஆயத்துகள் 5.

பிஸ்மில்லாஹிர்மானிற்றஹீம் அலம்தரகைப பஅலரப்புகபிஅஸ் ஹாபில்பீல்—யானைக் கூட்டத்தாரை உம்முடைய ஆண்டவன் எக்கெதி யாக்கினுனென்று நீங்கள் ஆராயவில்லையா?

அலம்எஜ்அல்கைதஹுமு்பீதல்லீலின்:—அவர்களின்மோசக் கருத்தை தவரும்படி அவன் செய்தானல்லவா?

வஅர்ஸலஅலைஹிம்தைரன் அபாபீல்:— இன்னும் அவர்கள் பேரில் கும்பல் கும்பலாய் பக்ஷிகளை அனுப்பிவைக்கவில்லையா?

தர்மீஹிம் பிஹிஜாரதின் மின்சிஜ்ஜீலின் :— அவர்களை கடுமையான பொடி கற்களால் எறிந்து கொல்லவில்லையா?

பஜ்அலஹுமு்கஅஸ்பின்மஉகூல்:— அவர்களை மெல்லப் பட்ட வைக்கோலைப்போல் அவன் ஆக்கிவிட்டான்.

---

## சூரத்துல்குரைஷ் மக்கிய்யா ஆயத்துகள் 5.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிற்றஹீம்லியீலாபி குரைஷின்யீலாபிஹிம் ரிஹ்லதஷ்ஷிதாயி வஸ்ஸைப் குரைஷி வம்சத்தாரை சினேகம் செய்வதற்காகவேண்டி அவர்களுக்காக மழை காலத்திலும் வெய்யில் காலத்திலும் பிரயாணங்களில் சினேகம் செய்வதற்காகவேண்டி பல்எஉபுதூரப்பஹாதல்பைதில்லதீஅத்அமஹுமு் மின்ஜுயின் வஆமனஹுமு்மின்கவ்ப் அவர்கள் இந்த கஉபாவின் ஆண்டவனை வணங்கிக்கொள்ளவும், இந்த ஆண்டவன் அவர்களின் பசிக்கு உணவளித்தான், இன்னும் பயத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றினுன்.

---

## சூரத்துல் மாஊன்மக்கிய்யா ஆயத்துகள் 7.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிற்றஹீம் அரஅய்தல்லதீ யுகத்திபுபித்தீன் தீர்ப்பு தினத்தை பொய்யாக்கினவனை நீங்கள் நோட்டமிடவில்லையா? பதாலிகல்லதீ எதுஉல் எதீம இவன் அனுதை குழந்தைகளுக்கு துன்பம்கொடுப்பவனுக இருக்கிருன் வலாயஹுமு்ல்லுஅலாதஆமில்மிஸ்கீன் இன்னும் ஏழைகளுக்கு அன்னம் கொடுக்க ஏவமாட்டான் பவய்லுன்லில் முஸல்லீனல்லதீனஹுமு் அன்ஸலாதிஹிம் ஸாஹுன். ஆதலால் தொழுகையாளிகளுக்கு வைல் என்னும் நரகம் உண்டாயிருக்கிறது. எப்படி தொழுபவர்களென்ருல் தங்களின்

தொழுகையில் கவனமில்லாது இருப்பவர்கள் அல்லதீனஹும் யுராஊன வஎம்னஊ னல்மாஊன் அவர்கள் முகதாக்ஷிணிய த்தை நாடித் தொழுவார்கள். இன்னும் உபயோகப் பொருள் களை கொடுப்பதை தடுக்கிறவர்கள்.

---

## சூரத்துல் கவ்தர்மக்கிய்யா ஆயத் 3.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிற்றஹீம். இன்ன அஉதைன கல் கவுதர். திட்டமாக நாம் உங்களுக்கு மேலான ஹவ்லல் கவுதரின் ஜலத்தைக் கொடுத்து இருக்கிறோம். பஸல்லி லிரப்பிகவன்ஹர் ஆதலால் உம்முடைய ஆண்டவனுக்காக தொழுதுகொள்ளும். இன்னும் குர்பானி கொடுத்து கொள் வீராக. இன்னஷானிஅகஹுவல் அப்தர் திட்டமாக உன் பகைவனே சர்வ நன்மைகளைவிட்டும் அறுபட்டவனாக இருக் கிறான்.

---

## சூரத்துல் காபிரூன் மக்கியா ஆயத் 6.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிற்றஹீம். குல்யா அய்யுஹல் காபிரூன நபியே! நீர் சொல்வீராக. விஸ்வாச மில்லா தவர்களே. லாஅஉபுதுமாதஉபுதூன நீங்கள் வணங்கும் வஸ்துக்களை நான் வணங்கமாட்டேன். வலா அன்தும் ஆபிதூனமா அஉபுது. இன்னும் நான் வணங்கும் ஆண்டவனை நீங்கள் வணங்குகிறவர்களுமல்ல. வலா அன ஆபிதும்மா அபத்தும். இன்னும் நீங்கள் வணங்கும் வஸ்துக்களை நான் வணங்குகிறவனுமல்ல, வலா அன்தும் ஆபிதூன மாஅஉபுது. இனிமேலும் நான் வணங்கும் ஆண்டவனை நீங்கள் வணங்கு கிறவர்களல்ல. லகும் தீனுகும் வலியதீன். உங்கள் மதத்தின் பலன் உங்களுக்கு உண்டு. இன்னும் என் மார்க்கத்தின் பலன் எனக்கு உண்டு.

---

## சூரத்துன்னஸர்மதனீ ஆயத் 3.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிற்றஹீம் இதாஜாஅநஸ்ருல்லா ஹிவல்பத்ஹு அல்லாவின் உதவியும் ஜெயமும் வந்து விட்டதானால் வரஅய்தன்னாஸ எதுகுலூன பீதீனில்லாஹி அப்வாஜன். இன்னும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஜனங்கள் கும்பல் கும்பலாக வந்து நுழைவதை நீங்கள் பார்ப்பீர்கள். பஸப்பிஹ்பிஹம்தி ரப்பிக வஸ்தஉபிர்ஹு இன்னஹுகான தவ்வாபா. பிறகு உன் ஆண்டவனின் புகழைக்கொண்டு

துதிப்பீராக. இன்னும் அவனிடத்தில் மன்னிப்பு தேடுவீராக. திட்டமாக அவன் மன்னிப்பை ஒப்புக்கொள்பவனுக இருக்கிருன்.

---

## ஸூரத்துல்லஹப் மக்கிய்யா ஆயத் 5.

பிஸ்மில்லாஹ்ஹிர்ரஹ்மானிற்றஹீம்தப்பத்எதா அபீலஹபின் வதப்—அபீ லஹபின் இருகரங்களும் நாஸ்தியாகக்கடவது. இன்னும் அவனும் நாஸ்தியாகக்கடவான் மாஅகுனு அன்குமாலுகுவமாகசப் அவன் சொத்தும் அவன்சம்பாதித்தலும் அவனுக்கு உபயோகமாகவில்லை. ஸஎஸ்லா நாரன் தாதலகபின். அவன் கொளுந்துவிட்டு எறியும் நெருப்பில் பின்னுல் சேருவான். வம்ர அதுஹு ஹம்மாலதல் ஹதபி. இன்னும் விறகு சுமக்கக். கூடிய அவன் பெண்ஜாதியும், பீஜீதிஹா ஹப்லுன் மிம்மஸது அவளின் கழுத்தில் கட்டப்பட்ட கயறுடன் (நரகத்தில் நுழைவாள்.)

---

## ஸூரத்துல்இகுலாஸ்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிற்றஹீம்குல்ஹு வல்லாஹு அஹது முஹம்மதே நீர் சொல்லும் அவனுகிறவன் அல்லாஹ்ஒருவனுக இருக்கும்அல்லாஹுஸ்ஸமது. அல்லாஹுத்தஆலா சர்வவஸ்துக்களின் தேவையைவிட்டும் நீங்கினவன். லம்யெலிது அவன் யாரையும் பெறவில்லை கருத்து ஸ்திரீ புத்திரர்கள் அற்றவன் வலம்யூலதுஅவன் எவரிடமும் பிறக்கவுமில்லை. (கருத்து மாதா பிதா அற்றவன்) வலம்யெகுல்லஹு குபுவன் அஹது இன்னும் அவனுக்கு சாமானமானவன் யாருமில்லை.

---

## ஸூரத்துல்பலக் மதனீ ஆயத்து 5.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிற்றஹீம்—குல் அஊதுபி ரப்பில் பலகி (நபியே) நீர் சொல்வீராக. விடியற்காலத்தில் ஆண்டவனிடத்தில் நான் காவல் தேடுகின்றேன். மின்ஷற்றிமா கலக அவன் சிருஷ்டி பொருள்களின் தீங்கைவிட்டும், வமின்ஷற்றின்னப்பாதாத்தி பில்உகதி. மந்திரத்தின் முடிச்சுகளில் ஓதக்கூடிய வஞ்சனைக்காரர்களின் தீங்கைவிட்டும், வமின்ஷற்றிஹாஸிதின்இதாஹஸது. பொருமையின் தீங்கைவிட்டும் இரக்ஷிக்கத் தேடுகிறேன்.

## சூரத்துன்னுஸ் மதனி ஆயத் 6.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிற்றஹீம் குல்அஊது பிறப்பின்னுஸ் (நபியே) நீர் சொல்வீராக. மனிதர்களுடைய ஆண்டவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். மலிகின்னுஸ் இலாஹின்னுஸ் மனிதர்களின் ராஜன் மனிதர்களின் ஆண்டவன். மின்ஷற்றில் வஸ்வாஸில் கன்னுஸ் மறைந்துகொண்டு கெடுக்கும் ஷைத்தானுடைய தீங்கைவிட்டும், அல்லதீயு வஸ்விஸுபீஸுதூரின்னுஸ் மினல்ஜின்னதிவன்னுஸ் எப்படி பட்டவனுனல் மனிதர்களின் இருதயத்தில் கெட்டஎண்ண முண்டாக்கிறவன் ஜின்னின் ஷைத்தானே விட்டும் மனிதர் களின் ஷைத்தானே விட்டும் இரக்ஷிக்கத் தேடுகின்றேன்.

---

## சூரத்துல் பாத்திஹா

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிற்றஹீம்

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். சர்வ உலகங்களையும் படைத்து இரக்ஷிக்கும் ஆண்டவனுக்கே சர்வ புகழும். அர்ரஹ்மானிற்றஹீம் இம்மையில் யாவர்கட்கும் கிருபை செய்பவனும் மறுமையில் விஸ்வாசிகட்குமட்டும் கிருபை செய்பவன். மாலிகி எவ்மித்தீன் கூலி கொடுக்கும் நாளின் எஜமானுனவன். இய்யாக நஉபுது நாங்கள் உன்னேயே வணங்குகிறோம். வஇய்யாக நஸ்தயீன் இன்னும் நாங்கள் உன்னிடமே உதவி தேடுகிறோம், இஹ்திநஸ்ஸிராத்தல் முஸ்தகீம் எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. சிராதல்லதீன அன்அம்த அலேஹிம் யார்மீது நீ நன்கொடை யளித்தாயோ அவர்களின் வழியில் எங்களை செலுத்துவாயாக. கைரில் மகுலூபி அலேஹிம். உன்கோபத்தினுட்பட்டவர்களின் வழியை விட்டும் கருத்து நஸாராக்கள் வலல்லாலீன் வழி சரிகிபோனவர்களின் வழியை விட்டும் கருத்துஎஹூதிகள் காப்பாற்றுவாயாக ஆமீன் எங்கள் துஆவை ஒப்புக்கொள்வாயாக.

---

## நோம்புடைய விபரம்.

## நோம்பின் பர்லு 2.

1. நிய்யது செய்கிறது.

2. கிழக்கு வெளுத்ததிலிருந்து பொழுது அடையும்வரை ஊன்தீன் சேர்க்கை தடுத்து வைய்த்துயிருக்கிறதாயிருக்கும்.

---

## நோம்பின் சுன்னத்து 5.

1. சஹர் தாமதமாக செய்கிறது.

2. நோம்பு திறக்கும் நேரத்தை முற்படுத்தி கொள்வது.

3. குர்ஆனோதுகிறது,

4. வீண் பேச்சுகளை விட்டும் நாவை தடுத்து இருக்கிறது.

5, கடைசி பத்துக்குமேல் எஅதிகாபு இருக்கிறது.

---

## நோம்பின் முறித்தல் 12.

1. வாய் கொப்பளிக்கும்போது தண்ணீர் தொண்டையில் முந்தி விடுகிறது.

2. நித்திரை செய்தவனாக குடிக்கிறது.

3. கிழக்கு வெளுத்தயிருக்கவில்லை என்று தின்கிறதும், குடிக்கிறதம், ஜிமாஉ செய்கிறது.

4. காதுக்குள்ளே எண்ணை சொட்டு விடுகிறது.

5. கல், கொட்டை, இரும்பு இவைகளை முளுங்கிறது.

6. றமலான் அடங்கலிலும் நிய்யத்து செய்யாமல் நோம்பு பிடிக்கிறது.

7. தொண்டையில் மழை, பனி புகுதுகிறது.

8. பெண்ஜாதியை பிடித்தோ, அல்லது முத்தமிட்டோ மணி எறக்கிறது.

9. துப்பறவு செய்யும்போது தண்ணீர் பின் துவாரத்துக்குள்ளே புகுவது.

10 வாய் நிறம்பிய சத்தியை உள்ளே மீள வைக்கிறது.

11. பல்லுக்கிடையில் கடலை பெருப்பமானதை முழுங்குகிறது.

12. பொழுது அடைந்ததென்றெண்ணி நோம்பு துறக்கிறத.

---

## தொழுகைக்கு பின் ஓதும் துஆ.

அல்லாஹு^ம்மஇிண்ணுநஸ்அலுக, ஈமானன், முஸ்தகீமன் வபல்லன், தாயிமன், வநல்றன், றஹ்மதன், வஇல்மன், நாபிஅன், வஅக்லன், காமிலன், வகல்பன், முநவ்வறன், வதவ்பீகன், இஹ்ஸானன், வதவ்பதன், நசூஹன். வசப்றன், ஜமீலன், வஅஜ்றன், அலீமன், வலிசானன்,

தாகிறன். வபத்னன், சாபிறன், வறிஜ்கன், வாஸிஅன், வசயியன், மஸ்கூறன், வதன்பன், மக்பூறன், வஅமலன், மக்பூலன், வதுஆஅன், முஸ்தஜாபன், வஜன்னதல், பிர்தவ்ஸி, நயீமன், பிறஹ்மதிக யாஅற்ஹமற்றுஹிமீன், அல்லாஹும்ம அமித்னுமஅல் ஈமான், வஹுசுற்னு மஅல்ஈமான், வஅத்ஹில் னல் ஜன்னதமஅல்ஈமான், அல்லாஹும்ம சற்றிப்னு பிஸறபில் குற்ஆன், வஅக்றிம்னு பிகருமாத்தி முஹம்மதின், ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம், அல்லாஹும்ம அஹ்ஸின், ஆகிபதனு, பில்உமூறி, குல்லிஹா, வஅஜிற்னு மின்ஹிஜ்யித் துன்யா, வஅதாபில், ஆகிரு, தவப்பனு, முஸ்லிமீன், வஅல்ஹிக்னு, பிஸ்ஸாலிஹீன், ஆமின், யாறப்பில் ஆலமீன், வல்ஹம்து, லில்லாஹிறப்பில் ஆலமீன்.

---

## அதன் மஅனு.

நாயனே! உன்னிடத்தில் கேள்கிறோம் செவ்வருதலான ஈமானையும், நேமமானவருசையையும், றஹ்மத்தான பார்வையையும், பிறயோஜனம் செய்யும் இல்மையும், நிறப்பமான அறிவையும், ஒளிவான இருதயத்தையும், நன்மையளவில் திருப்புதலையும், கலப்பற்ற தவ்பாவையும், அழகான பொருமையையும், வலுப்பமான கூலியையும், திகிர்செய்யும் நாவையும், சபுர்செய்யும் ஜடலத்தையும், விஸ்திரணமான இரணத்தையும், கபூல் செய்யப்பட்ட முயற்சியையும், பாவத்தை பொருக்குதலையும், ஒப்புக்கொள்ளப்பட்ட அமலையும், கபூல் செய்யப்பட்ட துஆவையும், சுகம்பொருந்தியபிர்தவ்ஸ் என்னும் சுவனலோகத்தையும் விரும்புகிறோம். உன் கிருபையைகொண்டு எல்லா கிருபையாளருக்கும் மிககிருபையாள்னை நாயனே! எங்களை ஈமானுடன் மவுத்தாக்கியருள் ஈமானுடன் எங்களை எழுப்பியருள் ஈமானுடன் சுவனலோகம் நுழையவைத்தருள் நாயனே! குர்ஆனுடைய சிறப்பை கொண்டு எங்களை சிறப்பாக்கியருள் நாயகத்துடைய சங்கையைகொண்டு எங்களை சங்கையாக்கியருள்.

நாயனே! எல்லாகருமங்களுடையஒடுக்கத்தைஎங்களுக்கு அழகாக்கியருள் துன்யாவுடய, தன்மையை, விட்டும் காத்து. ஆகிறத்துடைய அதாபைகாத்தருள். இஸ்லாமாக மவுத்தாக்கி ஸாலிஹீன்களில் சேர்த்தருள்எங்கள் துஆவைகபூல் செய்தருள் ஆலத்தார்களை வளர்க்ககூடியவனே வல்ஹம்து வில்லாஹி றப்பில் ஆலமீன்.

முற்றுபெற்றது.

# பிழை - திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 8 | கொடுக்ககிரது | கொடுக்கிறது |
| 7 | 6 | கைவிரல்களுடடைய | கைவிரல்களுடைய |
| 14 | 8 | ஸமிஅல்லாஹ்வலிமன் | ஸமிஅல்லாஹ்லிமன் |
| 14 | 12 | ஸமிஅல்லாஹ்வலிமன் | ஸ்மிஅல்லாஹ்லிமன் |
| 20 | 16 | வரஹ்தமத்துல்லாஹி | வரஹ்மதுல்லாஹி |
| 25 | 1 | அல்லாஹும்மம்பாரிக் | அல்லாஹும்மபாரிக் |
| 31 | 35 | வில்லாஹி | லில்லாஹி |

Printed at
AINARAJ PRESS, AYYAMPET.
(Tanjore Dt.)